தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

06.12.2012 P.M

07.12.2012 A.M

## ஆவின் பால் பண்ணைகளில் அமைச்சர் ஆய்வு

ஆவின் பால் உபபொருள்கள் உற்பத்தி செய்யும் அம்பத்தூர், காக்களூர் பால் பண்ணைகளில் பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

காக்களூர் பால் பண்ணையில் கையாளும் திறனை மேம்படுத்தி பாலை பைகளில் அடைக்கும் திறனை நாளொன்றுக்கு ஒரு லட்சம் லிட்டராக அதிகரிக்க ரூ.4.05 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பணிகளை அமைச்சர் ஆய்வு செய்தார்.

அதேபோல் அம்பத்தூர் பால் பண்ணையில் ரூ.11 கோடியில் உருவாக்கப்பட்டு வரும் பால் உபபொருள்கள் பண்ணையின் கட்டுமானப் பணிகளை பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

மார்ச் மாதத்திற்குள் அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தற்போது சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் விநியோகிக்கப்படும் 11 லட்சம் லிட்டர் பால், 13 லட்சம் லிட்டராக உயரும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது ஆவின் இணை நிர்வாக இயக்குநர் என்.சுப்பையன், பொதுமேலாளர் குமாரவேல் பாண்டியன், துணைப் பொது மேலாளர் சி.லோகிதாஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் காளான் வளர்ப்பு பயிற்சி

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் சார்பில் காளான் வளர்ப்பு பயிற்சி வகுப்பு செவ்வாய்க்கிழமை (டிச.11) நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் தொழில் முனைவோர், மாணவர்கள், இல்லத்தரசிகள் உள்பட அனைவரும் பங்குபெறலாம். டிச.11-ம் தேதி காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெற உள்ள இந்த வகுப்பில் பயிற்சி குறிப்பேடு, கையேடு மற்றும் மதிய உணவு வழங்கப்படும்.

பயிற்சியில் பங்குபெறும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

பயிற்சிக் கட்டணம் மற்றும் தகவல்களுக்கு 044 - 26263484 என்ற தொலைபேசி எண்ணில் பயிற்சி மையத் தலைவரைத் தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், யு-30, 10-வது தெரு, அண்ணா நகர் (ஜெயகோபால் கரோடியா பள்ளி பின்புறம்), சென்னை - 40 என்ற முகவரியிலும் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறலாம்.

**விவசாயிகளுக்கு 12 மணி நேரம் மின்சாரம் : முதல்வருக்கு பழ.நெடுமாறன் பாராட்டு**



காவிரிப் பாசன விவசாயிகளுக்கு 12 மணி நேரம் மின்சாரம் வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டதற்கு மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் அமைப்பாளர் பழ. நெடுமாறன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

காவிரிப் பாசன விவசாயிகளுக்கு தங்குத் தடையில்லாமல் நாள்தோறும் 12 மணி நேரம் மின்சாரம் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கு சலுகை விலையில் நீர்த்தெளிப்பான்கள் வழங்கவும், விவசாயிகள் செலுத்தவேண்டிய வேளாண் காப்பீட்டுக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்றும்

வேலைவாய்ப்பு இழந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை அளிக்கவும் பயிர் காய்ந்து போன விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 13 ஆயிரம் ரூபாய் வீதம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் முதல்வர் ஆணையிட்டுள்ளார். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

முதல்வர் அறிவித்துள்ள உதவிகள் விவசாயிகளுக்குச் சென்று சேர விரைவான நடவடிக்கைகளை அரசு அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

6th dec 2012 P.M

**விவசாய சங்கக் கூட்டமைப்புக் கூட்டம்**

மன்னார்குடியில் விவசாய சங்கங்கள் கூட்டமைப்பின் காவிரி டெல்டா மாவட்டங்களின் நிர்வாகக் குழுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் அலிவலம் மு. சேரன் தலைமை வகித்தார்.

பொசுச்செயலர் ஆறுபதி கல்யாணம்,பொருளாளர் திருத்துறைப்பூண்டி சி. பாலகிருஷ்ணன், விவசாயிகள் மன்றச் செயலர் என்.வி. சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தநர்.

கூட்டத்தில், போதிய நீரில்லாது காய்ந்த பயிர்களை மண்ணுடன் பெயர்த்து அஞ்சல் மூலம் அதை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்புவது, பயிர்கள் கருகுவதால் விவசாயிகள் தற்கொலை செய்வதைக் கைவிடவேண்டும், காவிரிப் பிரச்னையில் தொடர்ந்து போராடும் தமிழக முதல்வருக்கு நன்றி. காவிரி நீர் கோரி டிச. 7-ல் நடைபெறும் முழு அடைப்பு போராட்டம்,காவிரி உரிமை மீட்புக் குழு சார்பில் 8- ம் தேதி தஞ்சையில் நடைபெற உள்ள பேரணி,பொதுக்கூட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காவிரி டெல்டா நீர் பாசன விவசாயிகள் சங்கச் செயலர் காவிரி எஸ். ரெங்கநாதன்,விவசாயிகள் மன்ற வரதராஜன்,கூட்டமைப்பு இணைச் செயலர் வி. சத்தியநாராயணன்,காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்க பி.என்.எஸ். தனபாலன்,பாரதிய கிசான் சங்க மாநிலச் செயலர் எம்.சி. பழனிவேல்,இயற்கை வேளாண் கூட்டமைப்புச் செயலர் ஜயராமன்,மாவட்ட நெல் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகி ராஜமாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பரண்மேல் ஆடுவளர்ப்பு : விண்ணப்பிக்க அழைப்பு**

திருவாரூர் மாவட்டத்தில் பரண் மேல் ஆடுவளர்ப்புத் திட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் இத்திட்டம் 157 கிராமங்களில் குறிப்பாக ஆதிதிராவிடர் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்த விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. தற்போது பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும்

பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் இதரப் பிரிவினர் பயன்பெறும் வகையில் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

18 முதல் 55 வயதுள்ள ஆண்கள், பெண்கள் விண்ணப்பிக்கலாம். ஆடுவளர்க்க போதிய இடம் இருக்க வேண்டும். ஆடுகளை பராமரிக்க போதிய குடும்ப உறுப்பினர்கள் இருக்க வேண்டும். தீவனப்புல் வளர்க்க இடம் இருக்க வேண்டும். வங்கிக் கடன் மூலம் திட்டம் செயல்படுத்தவுள்ளதால் வங்கியில் கடன் நிலுவை இருக்கக் கூடாது. கடன் தொகையில் 10 சதவீதம் தொகை செலுத்த வேண்டும்.

விரும்புவோர் அந்தந்தப் பகுதியிலுள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து டிச15-ம் தேதிக்குள் விண்ணப்பம் பெற்ற இடத்திலே வழங்க வேண்டும்.

**உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர முனைப்பு தேவை**

நாகை மாவட்டத்தில் இதுவரை உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராகச் சேராத விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் உடனடியாக இதில் சேர முனைப்புக் காட்ட வேண்டும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

நாகை மாவட்டம், சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உழவர் பாதுகாப்புத் திட்ட நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில் அவர் மேலும் பேசியது:

உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள், சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த விஏஓ-க்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. விஏஓக்கள்,கிராமப் பணியாளர்கள், சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர்கள் அனைத்து கிராமங்களிலும் வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

இதைத் தொடர்ந்து, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருமண உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை உள்பட ரூ. 10.5 லட்சத்தில் உதவிகள் வழங்கப்பட்டன.

பூங்காவைச் சீரமைக்க உத்தரவு: சீர்காழி நகராட்சிப் பகுதியில் உள்ள காந்தி பூங்கா, முருகன் பூங்காக்களை ஆய்வு செய்த ஆட்சியர், இந்தப் பூங்காக்களில் தேவையான கட்டமைப்புகளை உடனடியாக மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டார்.

சீர்காழி தென்பாதியில் உள்ள மொத்தக் கூட்டுறவு விற்பனை சங்க நியாயவிலைக் கடையை ஆய்வு செய்த ஆட்சியர், பொருள்கள் எடைக் குறைவின்றி வழங்கப்பட வேண்டும் எனவும், கடைக்கு வழங்கப்படும் பொருள்கள் தரம் குறைவாக இருந்தால் உடனடியாக அவற்றை திருப்பியனுப்ப வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

சீர்காழி தொகுதி எம்எல்ஏ ம. சக்தி, வருவாய்க் கோட்டாட்சியர் பொ. ரெத்தினசாமி,

வட்டாட்சியர் அசோகன், நகராட்சி ஆணையர் மகாராஜன், தனி வட்டாட்சியர் ராஜ்குமார், வட்ட வழங்கல் அலுவலர் வசந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## விதைக் கிராம திட்டப் பயிற்சி

பொன்னமராவதி வட்டம், கொன்னைப்பட்டியில் விதைக் கிராம திட்டப் பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

ஒன்றியக் குழுத் தலைவர் சி. அழகுசுப்பையா தலைமை வகித்தார். அட்மா திட்ட தலைவர் காசி கண்ணப்பன் முன்னிலை வகித்தார்.

பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெ. கந்தசாமி, எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கிப் பேசினார்.

மேலும், நிலக்கடலைப் பயிருக்கு ஜிப்சம் இடுவதின் அவசியம், பயிர்ப் பாதுகாப்பில் வேம்பு சம்பந்தப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்துவது குறித்து அறிவுறுத்தினார்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை, உயிர் உரம் மற்றும் தொழில்நுட்பக் கையேடு உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

ஏற்பாடுகளை, வேளாண் உதவி அலுவலர்கள் குமாரசாமி, அருளானந்தம், மணிமுத்து, மலர்விழி, நடராஜன், அட்மா திட்ட அலுவலர்கள் அருணா, ராஜு ஆகியோர் செய்திருந்தனர்.

கொன்னைப்பட்டி ஊராட்சித் தலைவர் அழகி வெள்ளச்சாமி வரவேற்றார். துணை வேளாண் அலுவலர் எலிசபெத்ராணி நன்றி கூறினார்.

## கரும்புக்கு டன்னுக்கு ரூ. 3,500 வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

கரும்புக்கு டன்னுக்கு ரூ. 3,500 வழங்க வலியுறுத்தி, கரும்பு விவசாயிகள் புதன்கிழமை தீர்மானம் நிறைவேற்றினர்.

புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச் சங்கம், ஈரோடு, திருப்பூர் மாவட்ட புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச் சங்கம் ஆகியவற்றின் கூட்டு பொதுக் குழுக் கூட்டம் வேலாயுதம்பாளையத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச் சங்கத்தின் தலைவர் ஆடிட்டர் நல்லசாமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிற தீர்மானங்கள்:

2012-13-ம் ஆண்டு அரைவைப் பருவத்துக்கு கரும்புக்கான தொகையுடன், ஆலை வழங்கும் கூடுதல் தொகையையும் முறையாக அறிவித்து, சங்கப் பிரதிநிதிகளின் ஒப்புதலோடு, அரைவையை தொடங்க வேண்டும். இல்லாவிட்டால், இரு சங்கங்களின் சார்பில் ஆலை முன் தொடர் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

பதிவு செய்யாத கரும்புக்கு அதிக விலை கொடுத்து தனியார் சர்க்கரை ஆலைகள் வாங்குவதால், இனி வரும் காலங்களில் கரும்பை சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்யாமல் இருப்பது, 2011-12

அரைவை பருவத்துக்கு கரும்பு டன்னுக்கு கூடுதலாக ரூ. 200 வழங்க வேண்டும் என்ற கடந்த ஆண்டு கோரிக்கைக்கு முடிவு சொல்லாத ஆலை நிர்வாகத்தைக் கண்டிப்பது, அதே ஆண்டில் வெட்டிய கரும்புக்கு வழங்க வேண்டிய சர்க்கரையை தீபாவளிக்கு முன்பு வழங்காததைக் கண்டிப்பது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச் சங்கச் செயலர் கதிர்வேல், ஈரோடு, திருப்பூர் மாவட்ட புகளூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச் சங்கத் தலைவர் சண்முகராஜ், செயலர் நமசிவாயம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில், புன்னம் ஊராட்சி பழமாபுரத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

நிறுவனத்தின் முதன்மைப் பொது மேலாளர் (இயக்கம்) இரா. மணி, துணைப் பொது மேலாளர் (மனிதவளம்) பா. பட்டாபிராமன், கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் சூ. குழந்தைசாமி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சிவக்குமார் ஆகியோர் முகாமில் கலந்து கொண்டு கால்நடைகளுக்கான ஊட்டச்சத்து மாவை வழங்கி முகாமைத் தொடக்கி வைத்தனர்.

முகாமில், 228 கால்நடைகளுக்கு ரூ. 20 ஆயிரம் மதிப்புள்ள ஊட்டச்சத்து மாவு இலவசமாக வழங்கப்பட்டது. கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவர்கள் தமிழரசன், அனிதா, பார்த்தீபன் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் கால்நடைகளை பரிசோதனை செய்து இலவச சிகிச்சை

மற்றும் ஆலோசனைகளை வழங்கினர்.

**இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில் டிச.10-ல் புதுதில்லியில் தர்ணா போராட்டம்**

இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில் புதுதில்லி ஜந்தர் மந்தரில் டிச.10-ம் தேதி தர்ணா போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இச்சங்கத்தின் தலைவர் பி.கே.தெய்வசிகாமணி வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

மஞ்சள் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்க வலியுறுத்தி மத்திய அரசு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் டிச.10-ம் தேதி புதுதில்லி ஜந்தர் மந்தரில் டிச.10-ம் தேதி காலை 11 மணிக்கு தர்ணா போராட்டம் நடைபெறவுள்ளது.

தர்ணாவுக்கு ஈரோடு மக்களவைத் தொகுதி எம்.பி. அ.கணேசமூர்த்தி தலைமை வகிக்கிறார். பல்வேறு மாநில எம்.பிக்கள் ருத்ரமாதவராய் (பிஜுஜனதாதளம், ஒடிசா), என்.நாகேஸ்வரராய் (தெலுங்குதேசம், ஆந்திரம்), மதுயக்சி (ஆந்திரம்) உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

உத்தரபிரதேச முன்னாள் முதல்வர் ராஜ்நாத்சிங் மற்றும் நாடு முழுவதும் இருந்து 1,200 மஞ்சள்

விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். தமிழகத்தில் இருந்து 180 மஞ்சள் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். தமிழ்நாடு மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் காசியண்ணன் உள்பட பலர் பங்கேற்கின்றனர்.

மஞ்சள் உற்பத்தியாளர் சங்கங்களை மத்திய அரசு உடனடியாக உருவாக்க வேண்டும். முட்டை விலை நிர்ணயம் செய்யப்படுவதுபோல மஞ்சள் உற்பத்தியாளர்களே மஞ்சள் விலையை நிர்ணயிக்கும் வகையில் தேசிய மஞ்சள் ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்க வேண்டும். ஒரு குவிண்டால் மஞ்சளுக்கு ரூ.9,000 வரை பொருளீட்டுக்கடன் வழங்க வேண்டும். மஞ்சளை மூலிகை பட்டியலில் சேர்க்க வேண்டும். ஆன்லைன் வர்த்தகத்தில் இருந்து மஞ்சளை நீக்க வேண்டும். மஞ்சளுக்கு தனி வாரியம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இப்போராட்டம் நடைபெறுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்
07.12.2012 A.M

## பழநி வட்டாரத்தில் மழையில்லை நெல் நடவு , பணிகளில் தொய்வு

பழநி:பழநி மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளில் 5,500 ஹெக்டர் பரப்பளவில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்கின்றனர். போதிய மழையில்லாத காரணத்தால் நடவுப்பணியில் தயக்கம் காட்டுகின்றனர்.

பழநி-கொடைக்கானல் ரோடு, பாலசமுத்திரம், தொப்பம்பட்டி, பாப்பம்பட்டி பகுதிகளில் மழையை நம்பி, விவசாயிகள் முதல் கட்டப் நடவுப்பணிகளை துவக்கினர்.

போதிய மழையில்லாததால் குளங்கள், கிணறுகளில் தண்ணீர் மிகவும் குறைவாக உள்ளது. தொடர் மின்தடையால் பம்பு செட் மோட்டாரும் பயன்படுத்த முடியவில்லை.

விளைச்சலுக்கு தேவையான தண்ணீர், வயலுக்கு பாயச்ச முடியாத காரணத்தால், வளர்பருவத்திலேயே நெல் பயிர்கள் கருகி வீணாகிவிடும் என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர்.

விவசாயதுறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""நெல், கரும்பு விளைச்சலுக்கு நிறைய தண்ணீர் தேவைப்படுகிறது.

எதிர்பார்த்தளவிற்கு மழை பெய்யவில்லை. இவ்வாண்டு கடந்த ஆண்டைக்காட்டிலும் நெல் விளைச்சல் குறைவாகத்தான் இருக்கும்," என்றார்.

## பருத்தியில் பாதிப்பு பேராசிரியர்கள் ஆய்வு

ரெட்டியார்சத்திரம்:அம்மாபட்டி பகுதியில், 120 ஏக்கருக்கும் கூடுதலாக பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பல விவசாயிகள், டை னா, சிறுத்தை, பிரம்மா உள்ளிட்ட வீரிய ஒட்டு ரகங்களை சாகுபடி செய்துள்ளனர். பருவகால மாற்றத்தால், இவற்றில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான, இலைப்பேன், அசுவினி தாக்குதல் தென்பட்டது. இதனால், மகசூல் பாதிப்பிற்கான வாய்ப்பு உருவானது.

வாகரை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சேதுராமன், உழவியல் பேராசிரியர் கார்த்திகேயன், பூச்சியியல் துறை பேராசிரியர் அறிவுடை நம்பி ஆய்வில் ஈடுபட்டனர்.

மானோ குரோட்டோபாஸ், மீதேன் மெட்டாக் மருந்துகளை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி கலந்து தெளிக்க அறிவுறுத்தினர்.

வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராணி, வேளாண்மை அலுவலர் மோகன்குமார், துணை வேளாண்மை அலுவலர் மோகன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## பயிற்சி முகாம்

திண்டுக்கல்:வடமதுரையில், வேளா ண் பொறியியல் துறை-பழநி உபகோட்டத்தின் சார்பில், அட்மா திட்டத்தின் கீழ், 60-விவசாயிகளுக்கு, மழைநீர் சேகரிப்பு மற்றும் நவீன வேளாண் கருவிகள் பயன்பாடு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

பேரூராட்சி தலைவர் பாப்பாத்தி தலைமை வகித்தார். உதவி பொறியாளர் ரத்தினசபாபதி முன்னிலை வகித்தார். காந்திகிராம வேளாண்மை அறிவியல் மைய தொழில் நுட்ப அலுவலர் உதயகுமார், இளநிலை பொறியா ளர் முனியப்பன், கால்நடை மருத்துவர் ரவிசங்கர், வேளாண் துணை இய க்குநர் கிருஷ்ணமூர்த்தி, உதவி வேளாண் இயக்குநர் ராணி பங்கேற்றனர்.

## பயிர்கடன் தொகையை அதிகரிக்க ஆலோசனை

சிவகங்கை:சிவகங்கையில், வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு, எவ்வளவு பயிர்கடன் வழங்குவது குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது.

மத்திய கூட்டுறவு வங்கியில் நடந்த கூட்டத்திற்கு, வங்கி தனி அலுவலர் யசோதாதேவி தலைமை வகித்தார். மாநில கூட்டுறவு வங்கிகளின் மேலாளர் அருளாளன் முன்னிலை வகித்தார்.

நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் பங்காரு கிரி, சக்தி சர்க்கரை ஆலை உதவி மேலாளர் கண்ணன், உதவி இயக்குனர்கள் (தோட்டக்கலை) வெங்கடேஷ்வரன், (தரக்கட்டுப்பாடு) கதிரேசன் உட்பட விவசாயிகள், வங்கியாளர்கள்
பங்கேற்றனர்.

கூட்டத்தில், விவசாயிகளுக்கு கூட்டுறவு, அரசுடமை வங்கிகளில் பயிர் கடனாக ஏக்கருக்கு கூடுதலாக பயிர் கடன் தருவது என ஆலோசித்தனர்.

ஏக்கருக்கு நெல்லுக்கு ரூ.16,000; கரும்புக்கு ரூ.37,000; சிறுதானியங்களுக்கு ரூ.5,000; கடலைக்கு ரூ.11,800; பருத்திக்கு ரூ.12.500; மிளகாய்- ரூ.13,000; திசு வாழைக்கு ரூ.41,500 வரை கடன் வழங்கலாம் என முடிவு செய்தனர். இந்த ஆலோசனையை அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப முடிவு செய்தனர்.

## இந்தியாவில் பயறு உற்பத்தியை அதிகரிக்க அதிரடிமத்திய அரசு "பயறு வகை இயக்கம் ' புதிய திட்டம் அறிமுகம்

தூத்துக்குடி : நாட்டில் நிலவும் பயறு வகைகளின் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் இதன் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு "பயறு வகை இயக்கம்' என்னும் புதிய திட்டத்தை துவக்கியுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிகமான மானியங்களை வழங்க உத்தரவிட்டுள்ளது. தமிழகத்திற்கு இந்த திட்டத்திற்கு 19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்திற்கு 80 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் துவரை பயன்பாடு அதிகமாக இருந்தாலும் இதன் உற்பத்தி என்பது தமிழகத்தில்

குறைவாக இருக்கிறது. இதே போல் பயறு வகை பயிர்களான உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு போன்றவற்றின் தேவையும் இந்தியாவில் அதிகரித்துள்ளது. ஆனால் அதற்கு தகுந்தவாறு உற்பத்தி இல்லாததால் இதன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும், அதற்கு கூடுதலாக விவசாயிகளுக்கு மானியம் வழங்கவும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
இதற்காக இந்தியா முழுவதும் "பயறு வகை இயக்கம்' என்னும் புதிய திட்டத்தை மத்திய அரசு துவக்கியுள்ளது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமே பயறு வகை பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பது தான். தமிழகத்தை பொறுத்தமட்டில் பயறு வகை பயிர்கள் உற்பத்தியில் நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களை அடுத்து தூத்துக்குடி மாவட்டம் மாநில அளவில் மூன்றாம் இடத்தில் இருந்து வருகிறது.
தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தமட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளாக பயறு வகை பயிர்களான உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு போன்ற பயறு வகைகள் மொத்தம் 65 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டு வருகிறது. துவரையை பொறுத்தமட்டில் இம் மாவட்டத்தில் விளைவிக்க வைக்க நடவடிக்கை மேற்கொண்டு சுமார் 70 ஏக்கர் பரப்பில் முன்னோட்டமாக போடப்பட்டன. முதல் முதலாக இந்த ஆண்டு 400 ஹெக்டேர் பரப்பில் துவரை பயிரிட வேண்டிய முயற்சியில் வேளாண்மைத்துறையினர் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் பயறுவகை பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்க தமிழக அரசு உத்தரவின் பேரில் தூத்துக்குடி மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ் தலைமையில் வேளாண்மை அதிகாரி மார்டின்ராணி மற்றும் வேளாண்மைத்துறையினர் தீவிர ஏற்பாடுகள் செய்து, அரசின் திட்டத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். விவசாயிகளுக்கு இதற்கான இடுபொருட்கள் வழங்குவதுடன், நீர்பாய்ச்சும் கருவிகளும் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன. இந்த ஆண்டு புதியதாக வந்துள்ள பயறு வகை இயக்கம் மூலம் கூடுதல் மானிய உதவிகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறு வகை இயக்கத்திற்கு தூத்துக்குடி மாவட்டத்திற்கு மத்திய அரசு 80 லட்ச ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் பயறுவகை பயிர்களுக்கு பாசன வசதியை அதிகரிக்க செய்ய நீர்பாய்ச்சும் குழாய், நகரும் நீர் தெளிப்பான், மழை தூவான் ஆகிய பாசன கருவிகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.
நீர்பாய்ச்சும் குழாயிற்கு அதிகபட்ச மானியமாக ஒரு ஹெக்டேருக்கு 15 ஆயிரம் ரூபாய், நகரும் நீர்த் தெளிப்பானுக்கு ஒரு ஹெக்டேருக்கு 8 ஆயிரத்து 500 ரூபாய், மழை துவானுக்கு ஒரு ஹெக்டேருக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.
இம் மாவட்டத்தில் மொத்தம் 159 ஹெக்டேர் பரப்பில் நீர்பாய்ச்சும் குழாய், நகரும் நீர்தெளிப்பான் மற்றும் மழை தூவான் தலா 14 ஹெக்டேர் பரப்பில் அமைக்கவும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் தேவையுள்ள விவசாயிகள் வேளாண்மைத்துறை

அலுவலகத்தை அணுகி இதனை பெறலாம் என்று இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ் தெரிவித்தார். வேளாண்மை அதிகாரி மார்டின்ராணி உடனிருந்தார்.

4000 மானியத்தில் விவசாயிகளுக்கு தார்பாய் : பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தி பயறுவகை பாசன பரப்பை அதிகரித்து இதன் உற்பத்தியை அதிகரிக்க செய்ய வேண்டும் என்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் என்பதால் விவசாயிகள் பயறு வகை சாகுபடியில் ஆர்வம் காட்ட வேண்டும் என்று வேளாண்மைத்துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கதிர் அடிக்கவும், விளைந்த பயிர்களை காய வைப்பதற்கும் 50 சதவீத மானியத்தில் தார்பாய் வழங்கப்படுகிறது.

ஒரு தார் பாயிற்கு அதிகப்பட்சமாக 4 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கு மட்டும் மொத்தம் 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போல் பயறு உற்பத்தியை பெருக்க 2 சத டிஏபி கரைசல் தெளிக்க ஹெக்டேருக்கு 500 ரூபாய் மானியமும் இந்த திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதற்கு 23 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 4 ஆயிரத்து 770 ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

பயறு உடைக்கும் கருவி : இந்த திட்டத்தின் புதிய முறையாக முதல், முதலாக விவசாயிகள் ஆர்வலர்குழு அல்லது விவசாயம் சார்ந்த சுய உதவிக்குழுவிற்கு நூறு சதவீத மானியத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பயறு உடைக்கும் கருவி வழங்கப்படுகிறது. இம் மாவட்டத்திற்கு ஒரு பயறு உடைக்கும் கருவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

பயறுவகை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க செய்யும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்திற்கு மத்திய அரசு தமிழகத்திற்கு மொத்தம் 19 கோடியே 13 லட்ச ரூபாய் அனுமதியளித்துள்ளது. இதில் நெல்லை மாவட்டத்திற்கு 21 லட்சத்து 18 ஆயிரம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிகமான துவரை பயிரிடப்படுவதால் அந்த மாவட்டங்களுக்கு இந்த திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக வேளாண்மைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஆடு வளர்ப்புக்கு 50 மனுக்கள்**

குன்னூர் : பர்லியாறு ஊராட்சியில் நடந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஆடு வளர்ப்புக்காக 50 மனுக்கள் பெறப்பட்டன. பர்லியாறு ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் தலைவர் கலைசெல்வன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில், கிராம நிர்வாக அலுவலர் செல்வராஜ், கால்நடை மருத்துவர்கள் பார்த்தசாரதி, வினோத், துணை தலைவர் சுப்ரமணி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், கூலி தொழிலாளிகள் மற்றும் ஏழை மக்கள் வாழ்க்கை மேம்பட ஆடு வளர்க்க விரும்பும் மக்களிடம் மனுக்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட 59 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இதில் 50 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

## மழை காரணமாக கிருஷ்ணா கால்வாயில் நீர்வ ரத்து அதிகரிப்பு

ஊத்துக்கோட்டை:தொடர் மழை காரணமாக, கிருஷ்ணா கால்வாயில் நீர் வரத்து அதிகரித்து உள்ளது. வினாடிக்கு, 336 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்படி, கடந்த ஜூன், 2ம் தேதி முதல், தமிழகத்துக்கு கிருஷ்ணா நதி நீர் வந்து கொண்டு இருக்கிறது.

வரதய்யபாளையம் அருகே உள்ள, உப்பளமடுகு கால்வாயில் ஏற்பட்ட சேதம் காரணமாக, சிமென்ட் குழாய்கள் மூலம் மாற்றுப் பாதையில் தண்ணீர் திருப்பி விடப்பட்டது.

இதில், வினாடிக்கு, 400 அடிக்கு குறைவாகவே தண்ணீர் வந்தது. இதனிடையே, பருவ மழை பொய்த்ததால், ஆந்திர மாநில விவசாயிகள் விவசாயத்துக்கு, கிருஷ்ணா கால்வாயில் இயந்திரம் மூலம் தண்ணீரை உறிஞ்சி பயன்
படுத்தி வந்தனர்.

இதனால், தமிழகத்திற்கு வரும் தண்ணீரின் அளவு வெகுவாக குறைந்தது. தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை "ஜீரோ பாயிண்ட்'டில் வினாடிக்கு, 46.73 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.

கடந்த, 4ம் தேதி வங்கக் கடலில் ஏற்பட்ட, குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழக - ஆந்திர எல்லைப் பகுதிகளில் பலத்த மழை பெய்தது.

இதனால், கிருஷ்ணா கால்வாயில் நீர்வரத்து அதிகரித்தது. கடந்த, 4ம் தேதி காலை, 6.00 மணி நிலவரப்படி, வினாடிக்கு, 240 கன அடி தண்ணீர் வந்தது.

5ம் தேதி வினாடிக்கு, 350 கன அடி தண்ணீர் வந்தது. நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி வினாடிக்கு, 336 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

## தேக்கம் வெட்டிய கரும்புகள் சாலை ஓரத்தில் ... எடை குறையும் பயத்தில் விவசாயிகள் கவலை

பள்ளிப்பட்டு:கூட்டுறவு சர்க்கரை கரும்பு ஆலை அதிகாரிகளின் அலட்சிய போக்கால், வெட்டிய கரும்புகள் சாலை ஓரங்களில், 1,000 டன்னுக்கு மேல்
ஆங்காங்கே தேங்கி கிடப்பதால், எடைக் குறையும் நிலை ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக, தங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என, விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

பள்ளிப்பட்டு, அரக்கோணம், கனகம்மா சத்திரம், திருத்தணி, ஆர்.கே.பேட்டை பகுதியில் வசிக்கும் கரும்பு விவசாயிகள், திருவாலங்காட்டில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், தங்கள் மகசூல் கரும்பை விற்பனை செய்கின்றனர். மற்றவர்கள், ஆந்திர மாநிலத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகளில் விற்கின்றனர்.

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கரும்பு விற்க முன்கூட்டியே விவசாயிகள் நிலத்தின் உரிமையாளர் பெயரில் பதிவு செய்து விடுகின்றனர்.

இவ்வாறு, பதிவு செய்த விவசாயிகளின் நிலத்தில் விளைந்த கரும்பை வெட்டு பருவம் வந்த

உடன், அவற்றை வெட்ட ஆலையில் இருந்து உத்தரவு கடிதம் பெற்று, கூலி ஆட்கள் மூலம் வெட்டுகின்றனர்.

கர்நாடகாவில் இருந்து...

கரும்பு வெட்டுவதற்கு உள்ளூரில் கூலி ஆட்கள் கிடைப்பது இல்லை. இதனால், அந்தந்தப் பகுதியில் உள்ள கோட்ட அலுவலர்கள் உதவியுடன், கர்நாடக மாநிலத்தில் இருந்து கூலியாட்கள், ஏஜன்ட்கள் மூலம் வருகின்றனர். அவர்களுக்கு ஒரு டன்னுக்கு, 400 ரூபாய் முதல், 460 ரூபாய் வரை கூலியாக விவசாயிகள் வழங்குகின்றனர்.

கரும்பு வெட்ட ஆலை உத்தரவு வந்த பின், வெட்டிய கரும்புகள் சாலை ஓரங்களில் குவியலாக அடுக்கி வைக்கப்படுகின்றன. பின், அவற்றை லாரிகள் மூலம் ஆலைக்கு அனுப்பி வைக்கின்றனர். லாரிகளை அனுப்ப வேண்டிய ஆலை நிர்வாகம், மெத்தன போக்காக செயல்படுவதால் சாலை ஓரங்களில் அடுக்கி வைக்கப் பட்டு உள்ள, கரும்பு தேங்கி கிடக்கிறது.

சாலையோரங்களில் தேக்கம்

ஒரு வாரத்திற்கு மேலாக, வெட்டிய கரும்பு வெயிலில் காய்ந்து போவதால், எடை குறைந்து விடுகிறது. இதனால், கரும்பு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதுடன், அதை வெட்டிய கூலியாட்களுக்கும் கூலி குறைந்து விடுகிறது.

இதுகுறித்து, பொதட்டூர் பேட்டை விவசாயிகள் சிலர் கூறுகையில், "கரும்பு வெட்ட ஆர்டர் பெற்று கூலியாட்கள் மூலம் வெட்டினோம். ஆனால், ஆலை நிர்வாகம், ஒரு வாரமாக வெட்டிய கரும்பை எடுத்து செல்லாமல்
மெத்தனமாக உள்ளது' என்றனர்.

மேலும், "கரும்பு எடை குறைவதுடன் கூலியாட்கள் வேலையை தொடர முடியாமல், அவர்களுக்கு வெட்டியாக சம்பளம் கொடுத்து வருகிறோம். அத்திமாஞ்சேரி பேட்டை கோட்ட அலுவலகத்திற்கு, தினமும் சென்று வருகிறோம். அவர்கள், ஏதாவது ஒரு காரணம் கூறி காலம் கடத்தி வருகிறார்கள்' என, புலம்பினர்.

அரவை அளவு குறைவு

இதுகுறித்து திருத்தணி சர்க்கரை ஆலை கரும்பு பெருக்க அலுவலர் சங்கர் கூறுகையில், ""கரும்பு ஆலை இந்தாண்டு அக்டோபர், 23ம் தேதி துவங்கியது. தினமும் ஆலையில், 2,500 டன் கரும்பு அரவை நடைபெறும்," என்றார்.

மேலும், ""அரவை துவங்கிய, 35 நாட்கள் முதல், 40 நாட்களுக்குள் பராமரிப்பு பணி நடைபெற வேண்டும். இன்னும் பராமரிப்பு பணி நடைபெறாததால், தற்போது, 1,700 டன் முதல், 1,800 டன் வரை தான் அரவை நடைபெறுகிறது. இதனால், கரும்பு தேக்கம் ஏற்பட்டு உள்ளது. ஓரிரு நாட்களில் பராமரிப்பு பணி நடைபெற்ற பிறகு, வழக்கம் போல் கரும்பு லோடு தேக்கம் இல்லாமல் ஆலைக்கு எடுத்து வரப்படும்," என்றார்.

## மாவட்ட உழவர் சந்தைகள் சாதனை :ரூ.108.73 கோடி காய்கறிகள் விற்பனை

சேலம்: சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில், ஒன்றரை ஆண்டில், 1.15 லட்சம் டன் காய்கறிகள், 108.73 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.சேலம் மாவட்டத்தில், 11 இடங்களில் உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. கடந்த ஒன்றரை ஆண்டுகளில், சூரமங்கலம் சந்தையில், 1.4 லட்சம் விவசாயிகள், 24 ஆயிரத்து, 122 டன் காய்கறிகளை, 38.70 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர்.அம்மாபேட்டையில், 48 ஆயிரத்து, 734 விவசாயிகள், 9,503 டன் காய்கறிகளை, 15.46 கோடி ரூபாய்க்கும், ஆத்தூரில், 94 ஆயிரத்து, 163 விவசாயிகள், 18 ஆயிரத்து, 706 டன் காய்கறிகளை, 27.37 கோடி ரூபாய்க்கும், தாதகாப்பட்டி உழவர் சந்தையில், 1.23 லட்சம் விவசாயிகள், 18 ஆயிரத்து, 987 டன் காய்கறிகளை, 31.95 கோடி ரூபாய்க்கும் விற்றுள்ளனர்.ஆட்டையாம்பட்டி உழவர் சந்தையில், 3,274 டன் காய்கறிகள, 5.44 கோடி ரூபாய்க்கும், மேட்டூரில், 9,688 டன் காய்கறிகள், 14.67 கோடி ரூபாய்க்கும், ஆஸ்தம்பட்டியில், 7,503 டன் காய்கறிகள், 12.42 கோடி ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இளம்பிள்ளை உழவர் சந்தையில், 5,965 டன் காய்கறிகள், 10.13 கோடி ரூபாய்க்கும், தம்மம்பட்டியில், 6,024 டன் காய்கறிகள், 9.22 கோடி ரூபாய்க்கும், ஜலகண்டாபுரத்தில், 6,162 டன் காய்கறிகள், 10.17 கோடி ரூபாய்க்கும், இடைப்பாடி, 5,521 டன் காய்கறிகள், 8.90 கோடி ரூபாய்க்கும் விவசாயிகள் விற்பனை செய்துள்ளனர்.சேலம் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில், ஒன்றரை ஆண்டில், 1.15 லட்சம் டன் காய்கறிகளை, 108.73 கோடி ரூபாய்க்கு நுகர்வோரிடம் விற்பனை செய்து, விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர்

## தமிழகத்தில் பருப்பு விலை திடீர் சரிவு

சேலம்: வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு, துவரை, துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு வரத்து அதிகரித்துள்ளதால், அவற்றின் விலை திடீர் என சரிந்துள்ளது.தமிழகத்துக்கு தேவையான துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு கர்நாடகா, குஜாரத், மத்திய பிரதேச மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. டிசம்பர் மூன்றாவது வாரத்தில் விற்பனைக்கு வரும் புதுரக பருப்பு, ஜூலை மாதம் வரை, வரத்து இருக்கும்.நடப்பாண்டுக்கான பருப்பு விளைச்சல் அதிகரித்து இருப்பதால், வடமாநிலங்களில் இருந்து அதிகபடியான பருப்பு, துவரை விற்பனைக்கு வரதுவங்கி உள்ளது. இதனால் விலை குறைய துவங்கி உள்ளது.கடந்த வாரம் துவரம் பருப்பு மொத்த விலை குவிண்டால், 7,700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று குவிண்டால், 500 ரூபாய் சரிந்து, 7,200 ரூபாய்க்கு விற்றது. இரண்டாம் ரகம், 7,500 ரூபாய்க்கு விற்றது, 7,000 ரூபாயாகவும், மூன்றாம் ரகம், 7,300 ரூபாய்க்கு விற்றது, 6,750 ரூபாயாக சரிந்துள்ளது.மொத்த விலையில், சரிவு ஏற்பட்டு நிலையில், வியாபாரிகள் தங்களின் சுயலாபத்துக்காக சில்லறை விலையை குறைக்கவில்லை. நேற்று முதல் ரக துவரம் பருப்பு கிலோ, 78 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் கிலோ, 75 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 73 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.நேற்று உளுந்தம் பருப்பின் விலை, குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை, சரிந்துள்ளது. கடந்த வாரம்

வரை, மொத்த விலையில், குவிண்டால், 6,900 ரூபாய்க்கு விற்ற, முதல் ரக உளுந்தம் பருப்பு, நேற்று குவிண்டால், 6,400 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், 6,000 ரூபாயாக சரிந்தது.மொத்த விலையில், குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரையில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், சில்லரை விலையில் கிலோவுக்கு இரண்டு ரூபாய் மட்டுமே வியாபாரிகள் குறைப்பு செய்து, நேற்று முதல் ரகம், கிலோ, 68 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் கிலோ, 65 ரூபாய்க்கும் விற்றது.வியாபாரிகள் எதிர்பார்த்ததை விட அதிக அளவு துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு வடமாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. இதனால் மேலும், விலை சரிய வாய்ப்புள்ளது.

**தமிழகத்தில் பருப்பு விலை திடீர் சரிவு**

சேலம்: வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு, துவரை, துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு வரத்து அதிகரித்துள்ளதால், அவற்றின் விலை திடீர் என சரிந்துள்ளது.தமிழகத்துக்கு தேவையான துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு கர்நாடகா, குஜாரத், மத்திய பிரதேச மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. டிசம்பர் மூன்றாவது வாரத்தில் விற்பனைக்கு வரும் புதுரக பருப்பு, ஜூலை மாதம் வரை, வரத்து இருக்கும்.நடப்பாண்டுக்கான பருப்பு விளைச்சல் அதிகரித்து இருப்பதால், வடமாநிலங்களில் இருந்து அதிகபடியான பருப்பு, துவரை விற்பனைக்கு வரதுவங்கி உள்ளது. இதனால் விலை குறைய துவங்கி உள்ளது.கடந்த வாரம் துவரம் பருப்பு மொத்த விலை குவிண்டால், 7,700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று குவிண்டால், 500 ரூபாய் சரிந்து, 7,200 ரூபாய்க்கு விற்றது. இரண்டாம் ரகம், 7,500 ரூபாய்க்கு விற்றது, 7,000 ரூபாயாகவும், மூன்றாம் ரகம், 7,300 ரூபாய்க்கு விற்றது, 6,750 ரூபாயாக சரிந்துள்ளது.மொத்த விலையில், சரிவு ஏற்பட்டு நிலையில், வியாபாரிகள் தங்களின் சுயலாபத்துக்காக சில்லறை விலையை குறைக்கவில்லை. நேற்று முதல் ரக துவரம் பருப்பு கிலோ, 78 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் கிலோ, 75 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 73 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.நேற்று உளுந்தம் பருப்பின் விலை, குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை, சரிந்துள்ளது. கடந்த வாரம் வரை, மொத்த விலையில், குவிண்டால், 6,900 ரூபாய்க்கு விற்ற, முதல் ரக உளுந்தம் பருப்பு, நேற்று குவிண்டால், 6,400 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், 6,000 ரூபாயாக சரிந்தது.மொத்த விலையில், குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரையில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், சில்லரை விலையில் கிலோவுக்கு இரண்டு ரூபாய் மட்டுமே வியாபாரிகள் குறைப்பு செய்து, நேற்று முதல் ரகம், கிலோ, 68 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் கிலோ, 65 ரூபாய்க்கும் விற்றது.வியாபாரிகள் எதிர்பார்த்ததை விட அதிக அளவு துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு வடமாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. இதனால் மேலும், விலை சரிய வாய்ப்புள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.12.2012 A.M**

**கர்நாடகாவை கண்டித்து இன்று டெல்டா மாவட்டங்களில் பந்த்**



மன்னார்குடி : காவிரியில் தண்ணீர் தர மறுக்கும் கர்நாடகத்தை கண்டித்து இன்று தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டம் நடைபெறுகிறது. இதையொட்டி 300 இடங்களில் பஸ், ரயில் மறியல் நடத்தவும் விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். கர்நாடகா அரசு காவிரியில் தண்ணீர் திறக்க மறுத்ததால் டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் இந்த ஆண்டு குறுவை சாகுபடி நடைபெறவில்லை. உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும், சம்பா சாகுபடிக்கும் தண்ணீர் தர கர்நாடகா மாநிலம் மறுத்து வருகிறது. இதனால் தற்போது டெல்டா மாவட்டங்களில் சுமார் 10 லட்சம் ஏக்கர் சம்பா பயிர் தண்ணீரின்றி கருகுகிறது.

இந்நிலையில், காவிரியில் தமிழகத்திற்கு உரிய தண்ணீரை தர மறுக்கும் கர்நாடகத்தை கண்டித்தும், தமிழகத்துக்கு உரிய தண்ணீரை பெற்றுத்தர மத்திய அரசை வலியுறுத்தியும் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் இன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை முழு அடைப்பு நடத்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த போராட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, தஞ்சை மாவட்ட காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்து உள்ளன. தமிழ்நாடு

விவசாயிகள் சங்கம், தமிழக விவசாயிகள், சங்கம், விவசாயிகள் மன்றம், காவிரி டெல்டா விவசாயிகள் சங்கம், இயற்கை உழவர் மன்றம், நெல் உற்பத்தியாளர் சங்கம், தமிழக விவசாயிகள் மன்றம், பாசனதாரர்கள் சங்க கூட்டமைப்பு, காவிரி பாசன விவசாயிகள் நல சங்கம், மற்றும் அனைத்து வர்த்தகர் சங்கங்கள், திருவாரூர் மாவட்ட மருந்து வணிகர்கள் சங்கம், மன்னார்குடி, நீடாமங்கலம் பகுதி தனியார் மருத்துவமனைகள் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட சங்கங்கள், அமைப்புகள் ஆதரவு தெரிவித்து உள்ளன.
அத்துடன் இன்று 3 மாவட்டங்களிலும் 250 இடங்களில் சாலை மறியல், 50 இடங்களில் ரயில் மறியல், மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் முற்றுகை போராட்டங்களும் நடத்தவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இந்த போராட்டத்தையொட்டி, இன்று 2 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாய தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் டெல்டா மாவட்டங்கள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது. ஆதரவு தர அழைப்பு: இந்த போராட்டம் குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்ட துணைத்தலைவர் பி.ஆர்.பாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக விவசாயிகள் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தை அழிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள கர்நாடக மாநில அரசை கண்டித்து நடைபெறும் இந்த போராட்டம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. இது தமிழக மக்களின் ஜீவாதார பிரச்னை என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொண்டு இந்த போராட்டத்துக்கு தார்மீக ஆதரவு தர வேண்டுகிறோம்.
இந்த பந்த்துக்கு அனைத்து கல்வி நிலையங்களும் ஒத்துழைப்பு தரவேண்டும். அரசு ஊழியர்களின் ஆதரவையும் கோருகிறோம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

இதுவரையில் 3 பேர் தற்கொலை

நாகை மாவட்டம் கீழ்வேளூர் அடுத்த கூரத்தாங்குடியை சேர்ந்த ராஜாங்கம் என்ற விவசாயி, கருகும் சம்பா பயிர்களை காப்பாற்ற டீசல் இன்ஜின் மூலம் வயலுக்கு தண்ணீர் இறைக்க முயன்று, டீசல் வாங்கக்கூட பணம் இல்லாத நிலையில் வேதனையில் கடந்த மாதம் 24ம் தேதி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

^50 ஆயிரம் கடன் வாங்கி சம்பா சாகுபடி செய்த நாகை மாவட்டம் கீழையூரை அடுத்த மகிழியை சேர்ந்த விவசாயி செல்வராஜ் (52), தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகிய நிலையில், பாளம் பாளமாக வயல் வெடித்த நிலையில் மரத்தில் கடந்த மாதம் 29ம் தேதி தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

5 ஏக்கரில் சம்பா சாகுபடி செய்திருந்த நிலையில் தண்ணீரில்லாமல் வயலில் வெடிப்பு ஏற்பட்டு பயிர்கள் காய்ந்து காணப்பட்டதால் மனமுடைந்த திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுகா அபிவிருத்தீஸ்வரம் மேலத்தெருவைச் சேர்ந்த விவசாயி ஸ்ரீதர் (32), கடந்த மாதம் 30ம் தேதி வயலில் சுருண்டு விழுந்து இறந்து இறந்தார்.

மின்சாரம் இருந்தால் காப்பாற்றலாம்

காவிரி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் மன்னார்குடி ரங்கநாதன் கூறுகையில், 'பம்ப் செட் தண்ணீர் மூலம் சம்பா பயிரை காப்பாற்றும் வகையில் இன்னும் ஒரு மாதத்திற்கு நெய்வேலி மின்சாரம் முழுவதையும் டெல்டா விவசாயத்துக்கு திருப்பி விட்டால் ஓரளவு பயிரை காப்பாற்ற முடியும். அதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

**திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் 21ம் தேதி நடக்கிறது**

திருவண்ணாமலை,:திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வருகிற 21ம் தேதி(வெள்ளி) காலை 10 மணியளவில் கலெக்டர் விஜய்பிங்ளே தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர்.

எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பொது கோரிக்கைகள் இருப்பின் அதன்விவரம் குறித்த மனுக்களை வருகிற 11ம் தேதிக்குள்(செவ்வாய்) திருவண்ணாமலை கலெக்டருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், கலெக்டர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம் மற்றும் வேளாண்மை துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்ப பெட்டிகளிலும் மனுக்களை போடலாம்.

இந்த மனுக்கன் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் ஆய்வு செய்து பதில் அளிக்கவும், தகுந்த

நடவடிக்கை எடுக்கவும், குறைதீர்வு நாள் கூட்டத்தில் பதில் அளிக்கவும் உபயோகமாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**காய்கறி , பழங்கள் ஏற்றுமதி 2011ல் ரூ.8,241 கோடி**



புதுடெல்லி : மக்களவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் புரந்தேஸ்வரி அளித்த பதில்: கடந்த 2011,12ம் ஆண்டில் காய்கறி, பழங்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளின் ஏற்றுமதி 24 சதவீதம் அதிகரித்து, ரூ.8,241 கோடியாக உள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் இந்த ஏற்றுமதி ரூ.6,638 கோடியாக இருந்தது. கடந்த 2010,11ம் ஆண்டில் ரூ.1779 கோடியாக இருந்த வெங்காயம் ஏற்றுமதி, சென்ற ஆண்டில் ரூ.1,723 கோடியாக குறைந்தது. இவ்வாறு புரந்தேஸ்வரி தெரிவித்தார்.

**முட்டை விலை 280 காசாக நிர்ணயம்**



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 280 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக் குழு கூட்டம் நடைபெற்றது. தலைவர் செல்வராஜ் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத் தலைவர் நல்லதம்பி உள்பட பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

முட்டை விற்பனை, கொள்முதல் மற்றும் உற்பத்தி நிலவரம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர், முட்டை விலையில் 3 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, ஏற்கனவே 277 காசாக இருந்த முட்டை விலை 280 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. சென்னை , 280, ஹைதராபாத் , 276, மும்பை , 308, மைசூர் , 277, பெங்களூர் , 277, கொல்கத்தா , 320, டெல்லி , 327 காசுகள்.

## பாதாம் , முந்திரி பருப்பு இறக்குமதி அதிகரிப்பு



புதுடெல்லி : இந்தியாவில், பாதாம், முந்திரி உள்ளிட்ட பருப்புகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதால், வெளிநாடுகளில் இருந்து இவற்றின் இறக்குமதியும் உயர்ந்துள்ளது.

மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் புரந்தேஸ்வரி மாநிலங்களவையில் கூறியதாவது: பாதாம், முந்திரியில் ஊட்டச்சத்துகள் அதிகமாக உள்ளன. இவற்றை உண்பதால், உடல்நலன் தேறுகிறது. வெளிநாடுகளில் தினமும் ஒன்றிரண்டு பாதாம், முந்திரிகளை சாப்பிடுவதை வழக்கமாக வைத்துள்ளனர்.

அதுபோன்ற விழிப்புணர்வு இந்தியாவில் அதிகரித்து வருகிறது. இதனால் இவற்றின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. 2010,11ம் ஆண்டில் 5.29 லட்சம் டன், ஓடு பிரிக்காத கச்சா முந்திரி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது 2011,12ல் 8.09 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதன் மதிப்பு ரூ.5,233.76 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய வேளாண் செய்திகள்
07.12.2012 A.M

**தண்ணீர் இல்லாமல் தவிக்கும் காரைக்கால் விவசாயிகளை காப்பாற்ற அரசு முன்வர வேண்டும் முன்னாள் முதல்–அமைச்சர் வைத்திலிங்கம் வலியுறுத்தல்**

தண்ணீர் இல்லாமல் தவிக்கும் காரைக்கால் விவசாயிகளை காப்பாற்ற புதுச்சேரி அரசு முன்வர வேண்டும் என்று முன்னாள் முதல்–அமைச்சர் வைத்திலிங்கம் கூறினார்.

நினைவு நாள் தினம்

புதுச்சேரி மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள் தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அம்பேத்கர் உருவ படத்துக்கு கட்சியின் மாநில தலைவர் ஏ.வி.சுப்ரமணியன் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் முதல்–அமைச்சரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான வைத்திலிங்கம் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

விவசாயிகள் போராட்டம்

காரைக்காலில் அனைத்து கட்சி சார்பில் விவசாயிகள் போராட்டம் நடந்தது. இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்த போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்கள் காங்கிரஸ் கட்சியினர்தான். காரைக்கால் விவசாயிகள் ஏராளமாக செலவு செய்து விவசாயம் செய்து தற்போது பயிரை காப்பாற்ற முடியாமல் தவிக்கின்றனர். அவர்களுக்கு ஆறுதல் சொல்ல கூட ஆள் இல்லை. கர்நாடக அரசை எதிர்த்து அரசியல் ரீதியாக போராட்டம் நடத்தலாம். ஆனால் காரைக்கால் விவசாயிகளை எப்படி காப்பாற்றுவது.

தமிழக அரசு விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதே போல் புதுச்சேரி அரசும் செய்யலாம். விவசாயிகளுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து கொடுக்கலாம், தண்ணீர் இறைக்க என்ஜின் கொடுக்கலாம், பயிர்களை முழுவதுமாக காப்பீடு

செய்யலாம். நான் முதல்–அமைச்சராக இருந்தபோது 2009, 2010–ம் ஆண்டில் பயிர் காப்பீடு செய்யப்பட்டது. ஆனால் தற்போது உள்ள அரசு எதையும் செய்ய முன்வரவில்லை.

அரசு முன்வர வேண்டும்

மழையும் பொய்த்து விட்டது. எனவே பயிர்களை காப்பாற்ற விவசாயிகளுடன் அரசு கலந்து பேசி அவர்களுக்கு சலுகைகள் அளிக்க முன்வர வேண்டும். தற்போது காரைக்கால் விவசாயிகள் அனாதையாக நிற்கின்றனர். காரைக்காலில் ஆளும் என்.ஆர். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 3 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். அதில் ஒருவர் அமைச்சர். மற்ற 2 பேர் வாரிய தலைவர்கள். எனவே இந்த அரசு காரைக்கால் விவசாயிகளை காப்பாற்ற முன்வர வேண்டும்.
இவ்வாறு வைத்திலிங்கம் பேசினார்.

கலந்து கொண்டவர்கள்

நிகழ்ச்சியில் முன்னாள் முதல்–அமைச்சர் எம்.டி.ஆர்.ராமச்சந்திரன், முன்னாள் அமைச்சர் கந்தசாமி, பொதுச்செயலாளர் விநாயகமூர்த்தி, செயலாளர் தேவதாஸ், தனுசு, வட்டார தலைவர் ஏ.கே.டி. ஆறுமுகம், ரகுமான், இளைஞர் காங்கிரஸ் தலைவர் இளையராஜா, சேவாதள சேர்மன் குலசேகரன், முன்னாள் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் சாம்ராஜ், ராமமூர்த்தி மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.
தொடர்ந்து அவர்கள் சட்டசபை எதிரே உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்